# தமிழ் நாடு அரசு

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் 1) துறை

சுற்றறிக்கை எண். 28238/தேர்தல் 1/97-1, நாள்: 8.8.97

* * *

பொருள்: மன்றக் கூட்டங்களில் அதிகாரிகளை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது தொடர்பாக – அறிவுரைகள் – வெளியிடப்படுகின்றன.

....

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் மன்றக் கூட்டங்களில் பேசும்பொழுது அதிகாரிகளை தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டியும் கண்டித்தும் பேசுவது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மன்றக் கூட்டங்களில் இல்லாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் பெயர் குறிப்பிட்டு, அவர்களைப் பற்றி மன்றக் கூட்டங்களில் குற்றம் குறை கூறுவதோ விமர்சிப்பதோ சரியல்ல. எந்த ஒரு அதிகாரியைப் பற்றியும் தனிப்பட்ட முறையில் மன்றத்தில் கருத்து கூறுவது விரும்பத் தக்கதல்ல. எனவே, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன:-

1. மன்றக் கூட்டங்களில் சட்டப்படி பங்கெடுத்துக் கொள்ள முடியாத அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பற்றி தனிப்பட்ட முறையில் விமர்சிப்பதோ அல்லது கண்டனம் செய்து பேசுவதோ கூடாது.

2. அப்படி ஏதேனும் கருத்து தெரிவிக்கப்பட்டு இருந்தால் அது சம்பந்தமாக பேசப்பட்ட சொற்றொடர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

எல். மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5.
பேரூராட்சி இயக்குநர், சென்னை-108
(அனைத்து பேரூராட்சிகள் செயல் அலுவலர்களுக்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப் படுகிறது)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை.
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை.
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
ஆணையர், சேலம் மாநகராட்சி, சேலம்.
ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி.
ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி.
இருப்புக் கோப்புக்காக
உதிரி நகல்கள்
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை (அனைத்துப் பிரிவுகள்)

//ஆணைப்படி அனுப்பப் படுகிறது//

பிரிவு அலுவலர்.
8/8.